(4) அவையுரிமைப் பிரச்சினை.

'அலை ஓசை' நாளிதழ் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் 30—7—1977 அன்று கீழ்க்கண்ட அவை உரிமை குறித்த பிரச்னைக்கு முன் அறிவிப்புக் கொடுத்திருந்தார்.

"பேரவையின் 184-வது விதியின் கீழ், கீழ்குறித்துள்ள அவை உரிமை மீறல் பிரச்சினையை அவையின் முன் கொண்டு வர அனுமதி கோருகிறேன்.

30—7—1977 தேதியிட்ட 'அலை ஓசை' இதழில் இரண்டாவது பக்கத்தில், "சட்டசபையில் பத்திரிகை படிக்கலாமா?" என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அச் செய்தியில் 29—7—1977 அன்று பேரவையில் பத்திரிகை படிக்கலாமா என்ற ஒழுங்குப் பிரச்னையை தி.மு.க. உறுப்பினர் ரகுமான்கான் கிளப்பியதாகவும், காட்பாடி தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் ஜெயவேலு பத்திரிகை படித்துக் கொண்டிருந்த தாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால் உண்மையில் ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியது மாண்புமிகு உறுப்பினர் எம். ஏ. ஜெயவேலு ஆகும். ஒழுங்குப் பிரச்னையை எழுப்பிய உறுப்பினர் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார் என்று வேண்டுமென்றே அவர் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இது பேரவை நிகழ்ச்சியைத் திரித்துக் கூறுவது மட்டும் அல்லாமல், சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு இழுக்கு கற்பிப்பது ஆகும்.

எனவே, இது பேரவையின் உரிமையையும், உறுப்பினரின் உரிமையையும் மீறிய செயலாகும். எனவே, இப்பிரச்னை குறித்து அவையின் முன் கொண்டுவர அனுமதி கோருகிறேன்."

இது குறித்துப் பத்திரிகை ஆசிரியருக்கு விளக்கம் கேட்டு எழுதப்பட்டது.

அவரிடமிருந்து கீழ்க்கண்ட பதில் வரப்பெற்றுள்ளது.

"தங்களது கடிதம் கிடைத்தது. 23—7—1977 தேதியிட்ட 'அலை ஓசை'-யில் வெளிவந்த 'சட்ட சபையில் பத்திரிகை படிக்கலாமா ?' என்ற செய்தியில் தாங்கள் கூறியிருப்பது போல் தவறு நடந்துள்ளது. அதற்காக எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த தவறான செய்திக்காக இன்றைய (3—8—1977) 'அலை ஓசை' இதழில் திருத்தம் வெளியிடப் பட்டிருக்கிறது என்பதையும் தங்களது மேலான கவனத்திற்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்."

பதிலில் குறிப்பிட்டுள்ளபடியே, 3—8—1977 அன்று 'அலை ஓசை' பத்திரிகையில் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. பத்திரிகையில் திருத்தம் வெளியிடப்பட்டு, வருத்தமும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பேரவை நடவடிக்கைகளை வெளியிடும்போது பத்திரிகைகள் மிகக் கவனமாக இருக்க வேண்டுமென்றும், இம்மாதிரி தவறு களுக்கு இடமளிக்காமல் இருப்பது நலம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்சனையை இத்துடன் விட்டுவிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரை மாவட்டம் சின்னமனூர் காவல் நிலையத்தில் திரு. ஒச்சத் தேவர் 28—7—1977 அன்று மரணம் அடைந்தது குறித்தும், அதனால் பொது அமைதி கெடத்தக்க விதத்தில் அங்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம். "மதுரை மாவட்டம், சின்னமனூர் காவல் நிலையத்தில் திரு. ஒச்சத் தேவர் என்பவர் 28—7—1977 அன்று மர்மமாக மரணம் அடைந்தது குறித்தும், அதனால் பொது அமைதி கெடத்தக்க விதத்தில் அங்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்தும்" விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். எ. லத்தீப் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி அவையின் அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS